**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

முன்னிலை : - **திரு.என். அழகேசன், B.Sc., L.L.M.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, மன்னார்குடி.

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 - ஆம் நாள் வியாழக்கிழமை

TNTV06-000004-2009

**அசல் வழக்கு எண்.115/2009**

M.தவமணி .... வாதி

**// எதிர்//**

1. P.சேட்டு
2. P.அய்யாவு (இறந்தார்)
3. G. முத்துகிருஷ்ணன் (இறந்தார்)
4. V.முருகன் (இறந்தார்)

**(Amended as per Order in I.A.No.647/2024, Dated: 25.03.2025)**

.... பிரதிவாதிகள்

இவ்வழக்கு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.விஜயன், B.A., B.L., அவர்களும், 1ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.உதயகுமார், B.Sc., B.L., அவர்கள் முன்னிலையாகியும், 2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.ரவிச்சந்திரன், B.Sc., B.L., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

**தீர்ப்புரை**

வாதியின் சட்டப்படியான உரிமையிலும், அமைதியான அனுபவத்திலும் இருந்து வரும் தாவா சொத்தில் பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, முகவர்களோ, ஏஜெண்ட்களோ எவ்வித இடையூறும் ஏற்படுத்தக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை

பரிகாரம் வழங்கும் படியும், தாவா செலவுத்தொகை மற்றும் இதர பரிகாரங்கள் வழங்கக் கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **திருத்தப்பட்ட வாதி தரப்பு வழக்குரையின் சுருக்கம் :-**

**2.1.** தாவா சொத்து வாதியின் அமைதியான அனுபவத்திற்கும், சுவாதீனத்திற்கும் பிரதிவாதிகள் யாதொரு இடையூறும் ஏற்படுத்தக்கூடாது என பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்து வாதிக்கு சொந்தமான சொத்தாகும். மேற்படி சொத்தானது வாதியால் ஆண்டு அனுபவம் செய்யப்பட்டு வாதியின் அமைதியான அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வரும் சொத்தாகும்.

**2.2.** மேற்படி தாவா சொத்து மற்றும் இதர சொத்துக்களானது ஆதியில் அரசுக்கு சொந்தமானதாக இருந்து வந்து அதன் பிறகு தமிழ்நாடு அரிஜன வீட்டு வசதி வளர்ச்சி கழகம் சென்னை அவர்களால் மனைப்பிரிவுகளாக மாற்றப்பட்டு மேற்படி மனைப்பிரிவுகளில் சிறிய வீடுகள் கட்டப்பட்டுள்ளது. மேற்படி வீடுகள் பயனாளிகளுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. மேற்படி வீடுகளில் ஒரு வீடும் அதை சார்ந்த காலியிடமும் அதாவது தாவா சொத்து வாதியின் மாமியாராகிய செங்கம்மாள் அவர்களுக்கு கடந்த 26.03.1976 ம் தேதியில் தமிழக அரசால் ஒதுக்கப்பட்டது. அதன்பிறகு தாவா சொத்தானது மேற்படி செங்கம்மாள் அவர்களின் அமைதியான சுவாதீனத்திலும், அனுபவத்திலும் இருந்து வந்துள்ளது. அதன்பிறகு செங்கம்மாள் அவர்கள் உயிருடன் இருக்கும்போதே அவரது மகனும், வாதியின் கணவருமாகிய மணி அவர்களுக்கு ஒரு செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தி கொடுத்துள்ளார். மேற்படி செட்டில்மெண்ட் ஆவணம் கடந்த 18.05.1992 ம் தேதியில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணம் பதிவு செய்யப்பட்ட பிறகு தாவா

சொத்து வாதியின் கணவரான மணி அவரது அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வந்துள்ளது. அதன்பிறகு வாதியின் கணவர் மணி அவரது மனைவியாகிய வாதிக்கு தாவா சொத்தினை பொறுத்து கடந்த 11.08.2003 ம் தேதியில் பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தி கொடுத்துள்ளார். அது முதல் தாவா சொத்து வாதியின் அமைதியான அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வருகிறது.

**2.3.** மேற்படி தாவா சொத்தினை பொறுத்து வாதியின் கணவர் மற்றும் வாதியின் மாமியார் ஆகிய இருவரும் இவ்வழக்கின் 2 மற்றும் 3 பிரதிவாதிகளுக்கு எதிராகவும் மற்றும் பிச்சை என்ற நபருக்கு எதிராகவும் தாவா சொத்திலுள்ள காலியிடத்தில் எவ்வித தொந்தரவும் அளிக்க கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்து மேற்படி வழக்கானது அசல் வழக்கு எண்.702/1993 என நடைபெற்று வந்துள்ளது. மேற்படி வழக்கானது வாதியின் கணவர் மற்றும் வாதியின் மாமியார் ஆகியோரால் தாவா சொத்திலுள்ள காலியிடம் கிடைக்கப்பெற்றது குறித்து சரிவர நிரூபிக்கவிலலை என்ற காரணத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்பட்டுள்ளது. அதன் பிறகு பிரதிவாதிகள் தாவா சொத்தில் வாதிக்கு எவ்வித தொந்தரவும் அளிக்காமல் இருந்து வந்துள்ளார்கள். தாவா சொத்தில் வாதிக்கும் வாதியின் கணவருக்கும் இருந்த தொடர் அனுபவத்தின் காரணமாக நில அளவை பதிவேடுகள் துறை துணை இயக்குனரால் தாவா சொத்து நில அளவீடு செய்யப்பட்டு அதன் அடிப்படையில் வாதியின் கணவர் பெயருக்கு கடந்த 22.02.2001 ம் தேதியில் பட்டா வழங்கப்பட்டது. அதன் பிறகு மாவட்ட நில அளவையர் அவர்களால் தாவா சொத்து நில அளவீடு செய்யப்பட்டு தாவா சொத்திற்கு புல வரைப்படம் ஏற்படுத்தப்பட்டு அதன் அடிப்படையில் வாதியின் கணவருக்கு கடந்த 20.03.2002 ம் தேதியில் வழங்கப்பட்டது. வாதியின் கணவர்

அனுபவத்தையும், சுவாதீனத்தையும் அரசு ஏற்றுக்கொண்டதால் வாதியின் கணவருக்கு வருவாய் துறை ஆவணங்கள் வழங்கப்பட்டது. வாதியின் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்த தாவா சொத்தினை பொறுத்து வாதியின் கணவர் வாதிக்கு பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தியுள்ளார். அது முதல் தாவா சொத்தானது வாதியின் தனிப்பட்ட அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வருகிறது.

**2.4.** பிரதிவாதிகளுக்கும், தாவா சொத்திற்கும் எவ்வித உரிமையோ, சம்பந்தமோ, அனுபவமோ கிடையாது. மேலும் தாவா சொத்தில் பிரதிவாதிகள் அத்துமீறி சமுதாய கூடம் ஒன்றினை கட்டுவதற்கு முயற்சி செய்து வந்துள்ளார்கள். தாவா சொத்தில் கிழக்கு புறமாக காலியிடம் உள்ளதை அவர்களது அனுகூலமாக எடுத்துக்கொண்டு பிரதிவாதிகள் வாதியிடம் வீண் பிரச்சனை செய்து வந்துள்ளார்கள். தாவா சொத்தின் காலியிடம் வாதியின் மாமியாருக்கு கொடுக்கப்படவில்லை. வீடு மட்டுமே கொடுக்கப்பட்டது.

**2.5.** தாவா சொத்து வாதியின் மாமியார் செங்கம்மாள் காலத்தில் அரசால் நில ஒப்படை செய்யப்படும் போதே தாவா சொத்தின் முழு விஸ்தீரணமும் அருகிலுள்ள காலியிடமும் ஒப்படை செய்யப்பட்டது. அதன் அடிப்படையிலேயே கடந்த 2002 ம் ஆண்டில் வாதியின் கணவருக்கும், அதனை தொடர்ந்து வாதிக்கும் பட்டா வழங்கப்பட்டது. புல வரைப்படமும் வழங்கப்பட்டது.

**2.6.** பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தினை பொறுத்து எவ்வித உரிமையும், அனுபவமும் இல்லாத நிலையில் கடந்த 26.05.2008 ம் தேதியில் தாவா சொத்தில் ஆட்களுடன் அத்துமீறி தாவா சொத்தில் சமுதாய கூடம் கட்டப்போவதாகவும், அதற்காக குழி தோண்டுவதாகவும் கூறி தாவா சொத்தினை அபகரிக்க முயற்சி செய்துள்ளார்கள். அதனை வாதி அக்கம் பக்கத்தினர் உதவியுடன் தடுத்து நிறுத்திவிட்டார். இது குறித்து

வாதி காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டபோது காவல் துறையினர் பிரதிவாதிகளை அழைத்து தாவா சொத்தில் வாதியின் அனுபவத்திற்கு எவ்வித தொந்தரவும் அளிக்க கூடாது என அறிவுறுத்தி பிரதிவாதிகள் வாதியிடம் தாவா சொத்திலுள்ள காலியிடத்தை அபகரிக்காமல் விடமாட்டோம் என்றும் சமுதாய கூடம் கட்டியே தீர்வோம் என்று மிரட்டி சென்றுள்ளார்கள்.

**2.7.** ஆகவே, வாதியின் சட்டப்படியான உரிமையிலும், அமைதியான அனுபவத்திலும் இருந்து வரும் தாவா சொத்தில் பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, முகவர்களோ, ஏஜெண்டுகளோ எவ்வித இடையூறும் ஏற்படுத்தக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கும்படியும், தாவா செலவுத்தொகை மற்றும் இதர பரிகாரங்கள் வழங்கக் கோரியும் வாதியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) <u>1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்த எதிர் வழக்குரையின் சுருக்கம்</u> :-**

**3.1.** வாதியின் வழக்கு சரியல்ல. நிலைநிற்கதக்கதல்ல. வழக்கு விவரங்களை 1ம் பிரதிவாதி மறுத்தளிக்கிறார். வாதியே வழக்கை நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார். வழக்கு சொத்து வாதியின் தாயார் செங்கம்மாளுக்கு தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வளர்ச்சி கழகத்தால் 26.03.1976 ல் பட்டா கொடுக்கப்பட்டது என்பது உண்மை. அதை செங்கம்மாள் உயிரோடு இருக்கும் வரை ஆண்டு அனுபவித்து வந்து 05.04.1999 ம் தேதியில் ஒரு உயிலும் 10.04.1999 ல் 2 வது உயிலும் எழுதி வைத்தார். முதல் உயிலில் அவரது மகள்களுக்கு ஏற்கனவே பாகப்பிரிவினை மூலம் சொத்துக்கள் கொடுத்துவிட்டதால் அவரது 2 வது மகள் பானுமதிக்கு அவர் குடியிருந்த வீட்டையும் டி.எஸ்.நம்பர் 2349 ல் 430 சதுர அடியையும் ஒரு பதிவு செய்யப்பட்ட உயில் வாயிலாக எழுதி வைத்தார். இரண்டாவதாக மீண்டும் 10.04.1999 ல் அவரது மூத்த மகள் பவுனம்மாளுக்கு டி.எஸ்.நம்பர்

2349 ல் மீதமிருந்த 290 சதுர அடியை உயில் எழுதி வைத்தார். பிறகு செங்கம்மாள் 01.05.1999 ல் இறந்துவிட்டார்.

**3.2.** செங்கம்மாள் இறந்த தேதியில் அவர் எழுதி வைத்த இரண்டு உயில்களும் சட்டப்படி அமுலுக்கு வந்து உயில் மூலம் சொத்துக்களை அடைந்த பவுனம்மாளும், பானுமதியும் தனித்து சொத்துக்களை சுவாதீனம் எடுத்துக்கொண்டு அனுபவித்து வந்துள்ளார்கள். அந்த வகையில் பவுனம்மாளுக்கு கிடைத்த 290 சதுர அடியை அவரது மகளும் இந்த 2 வது பிரதிவாதியின் மனைவியுமான ரேவதிக்கு 14.03.2006 ல் ஒரு பதிவு செய்யப்பட்ட இனாம் செட்டில்மெண்ட் வாயிலாக ரேவதிக்கு கொடுத்து ரேவதியும் அவரது கணவரான 1வது பிரதிவாதியும் தாவா சொத்தை அனுபவித்து வருகிறார்கள். இதில் வாதிக்கோ, 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கோ எந்த உரிமையும் கிடையாது.

**3.3.** வாதி அவரது வழக்குரையில் 08.05.1992 ல் வாதியின் கணவருக்கு தாவா சொத்தை இனாம் செட்டில்மெண்ட் எழுதி வைத்ததாகவும், பிறகு வாதியின் கணவர் ஆண்டு அனுபவித்து வந்து 11.08.2003 ல் வாதிக்கு ஒரு இனாம் செட்டில்மெண்ட் எழுதி வைத்ததாகவும் கூறியிருப்பது உண்மைக்கு மாறானது. தாவா சொத்து ஒருபோதும் வாதிக்கோ, வாதியின் கணவருக்கோ அளிக்கப்படவில்லை. வாதி அனுபவித்ததாகவும், வாதியின் கணவரும் அனுபவித்து 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எதிராக அசல் வழக்கு எண்.702/1993 என வழக்கிட்டதாகவும் மேற்படி வழக்கு தள்ளுபடியாகிவிட்டதாகவும் கூறியிருப்பது பிரதிவாதிக்கு தெரியாது. மேற்படி வழக்கில் 1ம் பிரதிவாதி ஒரு தரப்பினர் அல்லாத காரணத்தால் அந்த தீர்ப்பின் முடிவுகள் இந்த பிரதிவாதியை எந்த வகையிலும் பாதிக்காது.

**3.4.** 1ம் பிரதிவாதி இந்த வழக்கில் தேவையில்லாத நபர். 1ம் பிரதிவாதியின் மனைவி ரேவதி தாவா சொத்தின் உரிமையாளர். அந்த முறையில் பதிவு செய்யப்பட்ட ஆவணம் வாயிலாக உரிமைபெற்ற 1ம் பிரதிவாதியின் மனைவி ரேவதியை இந்த வழக்கில் சேர்க்காத காரணத்தால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும். 1ம் பிரதிவாதிக்கும் மற்ற பிரதிவாதிகளுக்கும் இடையே எந்தவித சம்மந்தமும் கிடையாது.

**3.5.** 1ம் பிரதிவாதி மற்ற பிரதிவாதிகளுடன் சேர்ந்துகொண்டு வழக்கு சொத்தில் 26.05.2008 ல் ஆக்கிரமிக்க முயற்சி செய்ததாக கூறியிருப்பது முற்றிலும் தவறானது. 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எதிராக 1ம் பிரதிவாதி தான் குடியிருக்கும் வீடு மற்றும் இதர சொத்துக்கள் குறித்து பல வழக்குகள் தாக்கல் செய்து அனைத்தும் 1வது பிரதிவாதிக்கு சாதகமாக முடிவான நிலையில் 2 முதல் 4 பிரதிவாதிகள் தூண்டுதலின்பேரில் வாதி பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். எனவே வாதி தாக்கல் செய்துள்ள இந்த வழக்கை 1ம் பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிர்வழக்குரையை தாக்கல் செய்துள்ளார்.

4) **2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்த எதிர் வழக்குரையின் சுருக்கம் :-**

**4.1.** வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள தாவா சட்டப்படியும், நியாயப்படியும் நிலைநிற்ககூடியதல்ல. இதனடியில் ஒப்புக்கொள்ளும் விஷயங்கள் தவிர மற்றவைகளை பிரதிவாதிகள் மறுத்தளிக்கிறார்கள். அவைகளை வாதியே நிரூபிக்க வேண்டும்.

**4.2.** வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள தாவா உண்மைக்கு புறம்பான விவரங்களை கண்டு இந்த பிரதிவாதிகளுக்கு கஷ்டத்தையும், நஷ்டத்தையும் மன உளைச்சலையும் ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆதியில் தாவா சர்வே நம்பரில் உள்ள முழு விஸ்தீரணமும் அரசுக்கு சொந்தமாக இருந்து

தமிழக அரசால் தமிழ்நாடு அரிசன வீட்டு வசதி வளர்ச்சி கழகத்தின் மூலம் சுமார் 28 வீடுகள் கட்டி கொடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறு கட்டி கொடுக்கப்பட்ட வீடுகளில் ஹரிஜன வீட்டு வசதி கழகத்தால் ஒவ்வொரு பயனாளிகளுக்கும் கொடுக்கப்பட்டது வீடு மட்டுமே ஆகும். வீட்டை சுற்றியுள்ள பகுதிகள் அதன் பயனாளிகளுக்கு தமிழ்நாடு அரசால் ஒப்படைப்பு செய்யப்படவில்லை.

**4.3.** வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள சொத்து செங்கம்மாளுக்கு ஒப்படைப்பு செய்யப்படவில்லை. தாவாவில் சொல்லியுள்ளது போல் காலிமனை செங்கம்மாளுக்கு ஒப்படைப்பு செய்யப்படவில்லை. ஒப்படைப்பு செய்யப்பட்டது வீடு மட்டுமே ஆகும். அவ்வாறு வீடு ஒப்படைப்பு செய்ததும், நிபந்தனைகளுக்கு உட்பட்டுதான் ஒப்படைப்பு செய்யப்பட்டது. செங்கம்மாளுக்கு வீடு மட்டும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ள நிலையில் செங்கம்மாளுக்கு உரிமையும, பாத்யமும், அனுபவமும் இல்லாத காலிமனையை பொறுத்து செட்டில்மெண்ட் செய்து வைக்க செங்கம்மாளுக்கு எவ்வித உரிமையும் பாத்யமும் கிடையாது. அவ்வாறு செய்துள்ள செட்டில்மெண்ட் ஆவணமும் சட்டப்படி செல்லத்தக்து அல்ல. செங்கம்மாளுக்கு உரிமையில்லாத சொத்தை அவரது குமாரரான மணிக்கு செய்து வைத்துள்ள செட்டில்மெண்ட் செல்லாநிலையில் மணி என்பவரால் அவரது மனைவியான வாதி தவமணிக்கு செய்து வைத்துள்ள செட்டில்மெண்ட்டும் செல்லாநிலையது ஆகும். சட்டப்படி செல்லாத ஆவணத்தின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள பட்டா உத்தரவும் அதன் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதாக செல்லும் Land Survey உத்தரவும் சட்டப்படி செல்லாதது ஆகும்.

**4.4.** தமிழக அரசால் வீட்டு வசதி வளர்ச்சி கழகத்தால் மூன்று வரிசைகளாக வீடுகள் கட்டி கொடுக்கப்பட்டு அதன் அடிப்படையில் வடக்கு வரிசையில் 9 வீடுகளும், நடு

வரிசையில் 10 வீடுகளும், தெற்கு வரிசையில் 9 வீடுகளும் கட்டி கொடுக்கப்பட்டது. வீட்டைத் தவிர மற்ற இடங்கள் ஒப்படைப்புதாரர்களுக்கு ஒப்படைப்பு செய்யப்படவில்லை.

**4.5.** வாதியின் மாமியாரான செங்கம்மாளுக்கு அரிசன வீட்டு வசதி கழகத்தால் ஒப்படைப்பு செய்யப்பட்டது வீடு மட்டுமே ஆகும். வீட்டுக்கு அருகில் உள்ள காலிமனை செங்கம்மாளுக்கு ஒப்படைப்பு செய்யப்படவில்லை. எந்தவொரு காலத்திலும் செங்கம்மாள் காலி மனையை அவருடைய தனிப்பட்ட உரிமையுடைய சொத்தாக அனுபவம் செய்தது கிடையாது. காலிமனை அவருடைய தனிப்பட்ட அனுபவத்திலும் இருந்தது கிடையாது. அவ்வாறு அரிசன வீட்டு வசதி கழகத்தால் ஒப்படைப்பு செய்யப்படாத காலி இடத்தையும் சேர்த்து செங்கம்மாள் கடந்த 18.05.1992 ல் அவரது மகன் மணி என்பவருக்கு செட்டில்மெண்ட் செய்துள்ளதாக சொல்லியுள்ளது சட்டப்படி செல்லத்தக்கது அல்ல. மேலும் செங்கம்மாளின் குமாரரான மணியும் வீட்டிற்கு அருகில் உள்ள காலி மனையை எந்த ஒரு காலத்திலும் அனுபவம் செய்தது கிடையாது. அவருக்கு அதில் உரிமையும் கிடையாது. தமிழக அரசால் ஒப்படைப்பு செய்யப்படாத இடத்தை செங்கம்மாள் செட்டில்மெண்ட் செய்து கொடுத்துள்ளதும் சட்டப்படி செல்லாது. செங்கம்மாளுக்கு உரிமையோ, பாத்தியதையோ இல்லாத இடத்தை செங்கம்மாள் அவரது குமாரரான மணி என்பவருக்கு செட்டில்மெண்ட் செய்ய இயலாது. அவ்வாறு மணிக்கு உரிமையோ, அனுபவமோ, பாத்தியதையோ இல்லாத இடத்தை மணி அவரது மனைவியான வாதி திருமதி.தவமணிக்கு செட்டில்மெண்ட் செய்ய இயலாது. செங்கம்மாளோ அல்லது அவரது குமாரர் மணியோ அல்லது மணியின் மனைவியான திருமதி.தவமணியோ காலி மனைக்கு தமிழக அரசுக்கு கிஸ்தி செலுத்தியது கிடையாது. வாதியின் வழக்குரையில் சொத்து விவரத்தில் காணப்பட்டுள்ள சொத்து வாதிக்கு சொந்தமானது கிடையாது. அதில்

அவருக்கு அனுபவமும் கிடையாது. வாதியின் வழக்குரையில் சொல்லியுள்ள சொத்து விவரம் சரியானது அல்ல. வாதிக்கு உரிமையும், அனுபவமும், பாத்யதையும் இல்லாத சொத்தை பொறுத்து வாதி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்தை பிரதிவாதிகளுக்கு எதிராக கேட்க இயலாது.

**4.6.** செங்கம்மாள் உயிருடன் இருந்த காலத்தில் செங்கம்மாள் மற்றும் அவரது குமாரரான மணி என்பவர்களால் அய்யாவு, முத்துகிருஷ்ணன், பிச்சை என்பவர்களுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு எண்.702/1993 என்ற வழக்கு தாவா சொத்தை பொறுத்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு, அதற்கு எதிராக நாகப்பட்டினம் சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு வழக்கு எண்.24/1996 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி இரண்ட வழக்குகளும் முறையே கடந்த 28.05.1995 ல் மன்னார்குடி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திலும், கடந்த 14.10.1996 ல் நாகப்பட்டினம் சார்பு நீதிமன்றத்திலும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அதன் பின்னர் மணியின் சகோதரியான பானுமதி அவர்களால் மேற்படி தாவா விவரங்களை மறைத்து நீதிமன்றத்தில் முத்துகிருஷ்ணன், அய்யாவு, கணேசன் அவர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கு எண்.110/2001 என்ற வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

**4.7.** தற்பொழுது வழக்கு மூன்றாவது முறையாக தாவா சொத்து சம்பந்தமாக ஏற்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணைக்கு எதிராக வழக்கு உண்மைகளை மறைத்து தவறான வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதியின் வழக்கு Res Judicata என்ற கோட்பாட்டின் அடிப்படையில் சட்டப்படி செல்லத்தக்கது அல்ல.

**4.8.** வாதியின் வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள விஸ்தீர்ணத்தில் கண்டுள்ள சொத்து விவரம் அதன் நான்கெல்லைகளும் சரியானதல்ல. மேலும் வழக்குரையில் கண்டுள்ள சொத்து வாதியின் முன்னோர்களுக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டதோ, உரிமை உடையதோ, அனுபவம் உடையதோ, பாத்தியதை உடையதோ கிடையாது.

**4.9.** செங்கம்மாளுக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட வீட்டிற்கு கிழக்கே உள்ள காலிமனையில் அதாவது தாவாவில் கண்டுள்ள சொத்து விவரத்தில் அருந்ததியர்களால் சமுதாய கூடம் கட்டப்பட்டு அருந்ததிய சமுதாய மக்கள் அனைவரும் பொதுவாக அனுபவம் செய்து வருகிறார்கள். இறந்துபோன செங்கம்மாள் அவர்களுக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட வீட்டிற்கு கிழக்கே உள்ள காலிமனை முழுவதும் கடந்த 35 வருடங்களுக்கு மேலாக அதாவது தாவா சொத்து முழுவதும் தொடர்ந்து எவ்வித இடையூறும் இல்லாமல் எல்லோருக்கும் தெரிந்து அருந்ததியர் மக்களால் எல்லோருக்கும் பொதுவாக சமுதாய கூடம் மூங்கில் மற்றும் கீற்றுக்கொண்ட கொட்டகையை கட்டி அருந்ததியர் மக்கள் அனுபவம் செய்து வருகிறார்கள். மேற்படி அருந்ததியர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அருந்ததியர் சமுதாய மக்களின் தலைவராக அய்யாவும், செயலாளராக முத்துகிருஷ்ணனும் உள்ளனர். முருகன் என்பவருக்கு காலி மனையில் அருந்ததியர் மக்களால் கட்டப்பட்டுள்ள சமுதாய கூடத்திற்கு தெற்கே 4ம் பிரதிவாதியின் தகப்பனாருக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட வீடு உள்ளது. மேற்படி வீட்டில் 4ம் பிரதிவாதி வசித்து வருகின்றார். வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள தாவாவில் ஏற்கனவே ஏற்பட்ட தீர்ப்புக்கு பின்னரும் தாவா சொத்து செங்கம்மாள் மற்றும் மணி அவர்களின் அனுபவத்தில் இருந்து வந்ததாக சொல்வதும் அவருடைய அனுபவம் எந்த காலத்திலும் தடை செய்யப்பட்டது கிடையாது என்று சொல்லி உள்ளது அப்பட்டமான பொய்யாகும்.

**4.10.** வழக்குரையில் கண்டுள்ள 1ம் பிரதிவாதி வாதியின் கணவரின் சகோதரர் ஆவார். வாதியும், 1ம் பிரதிவாதியும் Collusive ஆக இருந்து கொண்டு ஒக்குமொத்தமாக 1ம் பிரதிவாதியாக இவ்வழக்கில் கண்டுள்ள சேட்டு சேர்க்கப்பட்டுள்ளார். வாதிக்கு உரிமையோ, பாத்தியதையோ இல்லாத சொத்தை வாதிக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளதாக சொல்லியுள்ளது சட்டப்படி செல்லத்தக்கது அல்ல. அவ்வாறு பட்டா வழங்கியுள்ளது பிரதிவாதிகளை எந்த வகையிலும் கட்டுப்படுத்தக்கூடியது கிடையாது. வாதிக்கோ அல்லது அவர் கணவர் மணிக்கோ அல்லது செங்கம்மாளுக்கோ எந்தவொரு காலத்திலும் காலி மனையில் அதாவது தாவா சொத்தில் அனுபவமோ, உரிமையோ, பாத்தியதையோ இருந்தது கிடையாது. அவ்வாறு பட்டா வழங்கப்பட்டுள்ளதாக சொல்லியுள்ளதும் எவ்வித விசாரணையும் மேற்கொள்ளப்படாமல் வழங்கி உள்ளதால் மேற்படி பட்டா உத்தரவு சட்டப்படி செல்லத்தக்கது அல்ல. இந்த பிரதிவாதிகளை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தக்கூடியது அல்ல.

**4.11.** செங்கம்மாளுக்கு கட்டி கொடுக்கப்பட்ட காலனி வீடு மட்டும்தான் ஒப்படைப்பு செய்யப்பட்டதாகும். வீட்டிற்கு கிழக்கே உள்ள காலிமனை செங்கம்மாளுக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டது கிடையாது. காலி மனையை செங்கம்மாளோ, மணியோ, வாதியோ எந்தவொரு காலத்திலும் அனுபவம் செய்தது கிடையாது.

**4.12.** வாதி தரப்பில் காலனி வீட்டுடன், வீட்டுக்கு கிழக்கே உள்ள காலிமனையும், வாதி அனுபவத்தில் இருந்து வருவதாக சொல்லியுள்ளதும், வாதியின் மாமியாரான செங்கம்மாள் காலத்தில் இருந்தே அவரால் அனுபவம் செய்யப்பட்டு வருவதாக சொல்லியுள்ளதும் உண்மையானதல்ல. அவைகள் யாவும் தாவாவின் தோதுக்காக

கற்பனையாகவும், உண்மைக்கு புறம்பாகவும் சொல்லப்பட்டவையாகும். காலனி வீட்டிற்கு கிழக்கே உள்ள காலி மனையில் வாதிக்கு அனுபவம் கிடையாது. உரிமையும் கிடையாது.

**4.13.** வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட தாவா சட்டப்படியும், நியாயப்படியும் உண்மை நிலவரங்கள் படியும் செல்லத்தக்கது அல்ல. வாதி தரப்பில் கேட்டுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் வாதிக்கு கிடைக்கதக்கது அல்ல. தாவா சொத்து விவரம் தவறானது என்பதினாலும், வாதிக்கு தாவா சொத்துக்களில் எந்தவித உரிமையோ, பாத்யதையோ, அனுபவமோ கிடையாது என்பதினாலும், தவறான வழக்கு மூலத்தின் அடிப்படையில் தாவா செய்யப்பட்டுள்ளது என்பதினாலும் வாதி தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று 2 முதல் 4 பிரதிவாதிகள் எதிர்வழக்குரையை தாக்கல் செய்துள்ளார்கள்.

**5)** இவ்வழக்கில் தீர்வு காணும் பொருட்டு, வழக்குரை, எதிர்வழக்குரை ஆகியவற்றை இந்நீதிமன்றம் நன்கு பரிசீலித்து கீழ்கண்ட வழக்கெழுவினாக்கள் வனையப்பட்டன.

**வழக்கெழுவினாக்கள் :-**

1. Whether the suit is suffered by the principle of res-Judicata?
2. Whether the Sengammal has right to settle the property in favour of plaintiff's husband?
3. Whether legal right pass over to plaintiff through settlement deed of 11.08.2003?
4. To what other relief?

**6)** மேலும் திருத்தப்பட்ட வழக்குரை, எதிர்வழக்குரை ஆகியவற்றை பரிசீலனை செய்ததில் மறுசீரமைக்கப்பட்ட வழக்கெழுவினாக்கள் அவசியம் என்பதால் கீழ்கண்டவாறு எழுவினாக்கள் மறுசீரமைக்கப்பட்டன.

**Recasted Issues:-**

1. Whether the Plaintiff has in possession and enjoyment of the suit property?
2. Whether the Plaintiff entitle the relief of Permanent Injunction against defendants as prayed for?
3. Whether the suit is hit by principle of Res-Judicata?
4. To what other relief?

**7) இருதரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிய சான்றாவணங்கள் :-**

வாதி தரப்பில் வாதி தவமணி வா.சா.1 ஆகவும், கண்ணன் என்பவர் வா.சா.2 ஆகவும், 2ம் வாதி தங்கவேல் என்பவர் வா.சா.3 ஆகவும் விசாரிக்கப்பட்டு வா.சா.1ன் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் 1ம் பிரதிவாதி சேட்டு என்பவர் பி.சா.1 ஆகவும், ராஜேந்திரன் என்பவர் பி.சா.2 ஆகவும், ரகுபதி என்பவர் பி.சா.3 ஆகவும் விசாரிக்கப்பட்டு பி.சா.1ன் மூலம் பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**8) வாதி தரப்பு வாதுரையின் சுருக்கம் :-**

வாதி தரப்பில் தாவா சொத்தானது வாதியின் உடமையிலும், அனுபோகத்திலும் இருப்பதை பிரதிவாதி இடையூறு செய்வதை வாதியானவர் தகுந்த சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபித்துள்ளதால் வாதி கோருகின்ற நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பிரதிவாதிகளுக்கு எதிராக கிடைக்கதக்கது என வாதியின் கற்றறிந்த வழக்கறிஞர் வாதம் செய்தார்.

**9) பிரதிவாதிகள் தரப்பு வாதுரையின் சுருக்கம் :-**

தாவா சொத்தானது வாதியின் அனுபோகத்தில் இல்லை என்றும், பிரதிவாதிகளுக்கு உயில் ஆவணத்தின் மூலம் கிடைத்து பிரதிவாதிகளின் உரிமையிலும் அனுபோகத்திலும் உள்ளதால் வாதி தாக்கல் செய்த இந்த வழக்கை பிரதிவாதிகளின்

செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என பிரதிவாதிகளின் கற்றறிந்த வழக்கறிஞர் வாதம் செய்தார்.

10) **தீர்வு** :-

**எழுவினா -1 முதல் எழுவினா - 3- க்கான தீர்வுகள் :-**

i) வாதி தாவா சொத்தில் உடமையிலும், சுவாதீனத்திலும் இருந்து வருகிறார்கள் என்பதை நிரூபிக்க வேண்டிய பொறுப்பானது பிரிவு 101 இந்திய சாட்சிய சட்டத்தின்கீழ் வாதியைச் சார்ந்தது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

ii) தாவா சொத்தானது வாதியின் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வருகிறதா? என்பது குறித்து பரிசீலிக்கையில், நாகப்பட்டிணம் பதிவு மாவட்டம், மன்னார்குடி சார்பதிவகம், திருவாரூர் வருவாய் மாவட்டம், மன்னார்குடி தாலுக்கா மற்றும் டவுன், பழைய பிளாக் எண்.86, புதிய பிளாக் எண்.41, வார்டு எண்.1, பழைய டி.எஸ்.எண்.2349, புதிய டி.எஸ்.எண்.76-ல் 963 ஸ்கொயர் ஃபீட்டில் மாடி வீடு, தாவா சொத்தானது உள்ளது என வழக்குரையிலும், நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லப்பட்டுள்ளது.

iii) வாதி தரப்பு வழக்கை நிரூபணம் செய்யும் விதமாக வாதி தவமணி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மூலமாக கடந்த 18.05.1992 ம் தேதியன்று செங்கம்மாள் அவர்களால் மணிக்கு ஏற்படுத்தப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 ஆகவும், கடந்த 22.02.2001 ம் தேதியன்று நில அளவை துறை உதவி இயக்குனர் அவர்களால் மணி அவர்கள் பெயரில் வழங்கப்பட்ட பட்டா வா.சா.ஆ.2 ஆகவும், கடந்த 20.08.2003 ம் தேதியன்று திருவாரூர் மாவட்ட நில அளவை துறையால் வழங்கப்பட்ட புல வரைபடம் வா.சா.ஆ.3 ஆகவும், கடந்த 11.08.2003 ம் தேதியன்று வாதிக்கு வாதியின் கணவரால் ஏற்படுத்தி கொடுக்கப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம் வா.சா.ஆ.4 ஆகவும்,

கடந்த 31.08.2021ம் தேதியன்று நகர நிலவரி திட்ட தனி வட்டாட்சியர் மன்னார்குடி அவர்களால் வழங்கப்பட்ட பட்டா மாறுதல் உத்தரவு அசல் வா.சா.ஆ.5 ஆகவும், நகர சார்ஆய்வாளர் அவர்களால் வழங்கப்பட்ட நகரளவை பதிவேடு உண்மை நகல் வா.சா.ஆ.6 ஆகவும், நகர சார் ஆய்வாளர் அவர்களால் வழங்கப்பட்ட புலபடம் உண்மை நகல் வா.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.1 ன் சாட்சியத்தை ஒத்துரைத்து கண்ணன் என்பவர் வா.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளனர்.

iv) பிரதிவாதிகள் தரப்பு வழக்கை நிரூபணம் செய்யும் விதமாக 1ம் பிரதிவாதி சேட்டு என்பவர் பி.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மூலமாக கடந்த 18.05.1992ம் தேதியன்று 1ம் பிரதிவாதியின் குடும்பத்திற்குள் ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரம் அசல் பி.சா.ஆ.1 ஆகவும், கடந்த 18.05.1992ம் தேதியன்று 1ம் பிரதிவாதியின் தாயார் செங்கம்மாள் அவரது 3 வது மகன் மணிக்கு எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரம் அசல் பி.சா.ஆ.2 ஆகவும், கடந்த 27.03.1992ம் தேதியன்று 1ம் பிரதிவாதியின் தாயார் செங்கம்மாள் அவரது 5 வது மகனான 1ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த உயில் ஆவணம் அசல் பி.சா.ஆ.3 ஆகவும், கடந்த 10.04.1999ம் தேதியன்று 1ம் பிரதிவாதியின் தாயார் செங்கம்மாள் அவரது 2 வது மகள் பவுனம்மாளுக்கு எழுதி கொடுத்த உயில் ஆவணம் அசல் பி.சா.ஆ.4 ஆகவும், கடந்த 28.04.1997ம் தேதியன்று செயற்பொறியாளர் அளித்த வரைபடம் அசல் பி.சா.ஆ.5 ஆகவும், கடந்த 14.03.2006 பவுனம்மாள் அவரது மகளும், 1ம் பிரதிவாதியின் மனைவியுமான ரேவதிக்கு எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரம் அசல் பி.சா.ஆ.6 ஆகவும், கடந்த 06.08.1999ம் தேதியன்று 1ம் பிரதிவாதியின் தாயார் செங்கம்மாள் இறப்பு சான்று அசல் பி.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பி.சா.1ன் சாட்சியத்தை ஒத்துரைத்து

ராஜேந்திரன் என்பவர் பி.சா.2 ஆகவும், ரகுபதி என்பவர் பி.சா.3 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளனர்.

v) வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், 18.05.1992 ம் தேதியன்று செங்கம்மாள் வாதியின் கணவர் மணி என்பவருக்கு புல எண்.2350 விஸ்தீரணம் 1300 சதுரடி நிலமும், அதிலுள்ள ஓட்டு வீட்டினையும் இனாம் செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் எழுதி கொடுத்து மேற்கண்ட ஆவணம் மன்னார்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.1160 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. மேற்கண்ட ஆவணத்தையே பிரதிவாதி தரப்பில் பி.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.2 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், புல எண்.2349 மற்றும் 2350 ஆகியவை வாதியின் கணவர் மணி என்பவரின் பெயரில் நில அளவை துறை உதவி இயக்குனர் அவர்களால் வழங்கப்பட்ட பட்டா என்பது தெரிய வருகிறது. மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் தாவா சொத்தும் புல எண்.2350 சொத்தும் வாதியின் கணவர் மணி பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

vi) வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.9 ஆவணங்களை பரிசீலனை செய்கையில், தாவா சொத்தின் புல வரைபடம் என்பது தெரிய வருகிறது. மேற்கண்ட புல வரைபடத்தை பிரதிவாதிகள் தரப்பில் பி.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.4 ஆவணத்தை பரிசீலனை செய்கையில் வாதியின் கணவர் மணி கடந்த 11.08.2003 ம் தேதியன்று தாவா சொத்தினை வாதிக்கு இனாம் செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் எழுதிக்கொடுத்து மேற்கண்ட ஆவணம் மன்னார்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.1374/2003 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. வா.சா.ஆ.1, வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.4 ஆவணங்களின் அடிப்படையில் தாவா

சொத்தானது வாதியின் கணவர் மணிக்கு கிடைக்கப்பெற்று அவரது அனுபோகத்தில் இருந்ததை அவரது மனைவியான வாதி தவமணிக்கு கிடைக்கப்பெற்ற சொத்து என்பது தெரிய வருகிறது. மேற்படி வா.சா.ஆ.4 ஆவணமான இனாம் செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையிலும் தாவா சொத்து மற்றும் இதர சொத்தானது வாதியின் கணவர் பெயரிலிருந்து வாதியின் பெயருக்கு பட்டா மாற்றம் ஏற்பட்டுள்ளது வா.சா.ஆ.5 ஆவணம் மூலம் தெரிய வருகிறது. மேற்படி ஆவணத்தை உறுதி செய்யும் வகையில், வா.சா.ஆ.6 ஆவணமானது மன்னார்குடி நகரளவை பதிவேட்டில் தாவா சொத்து மற்றும் இதர சொத்தும் வாதி உரிமையாளர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது தெரிய வருகிறது. மேற்படி வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் வாதியின் கணவருக்கு அவரது தாயார் செங்கம்மாள் இனாம் செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் எழுதிக்கொடுத்து அவரது அனுபோகத்திற்கு பின்னர் வாதியின் கணவர் வாதிக்கு இனாம் செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் எழுதி கொடுக்கப்பட்டு மேற்கண்ட சொத்தானது வாதியின் அனுபோகத்தில் உள்ளது என்பதற்கு வாதியின் பெயரில் வருவாய்துறை ஆவணங்கள் பெயர் மாற்றம் ஏற்பட்டுள்ளது. வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 வரையிலான ஆவணங்களின் அடிப்படையிலும் வா.சா.1 சாட்சியத்தின் அடிப்படையில் தெரிய வருகிறது.

Vii) மேற்படி தாவா சொத்தானது வாதிக்கு சட்டப்படி உரிமையுள்ள சொத்து இல்லை என்றும், மேற்படி சொத்தானது செங்கம்மாள் உயில் ஆவணம் மூலம் 1ம் பிரதிவாதி மற்றும் பவுனம்மாள் ஆகியோருக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட சொத்து என்று பிரதிவாதிகள் தரப்பில் கட்சி செய்யப்பட்டுள்ளது. மேற்படி பிரதிவாதிகள் தரப்பில் கட்சியை நிரூபிக்கும் விதத்தில் தாவா சொத்து மற்றும் இதர சொத்துக்கள் தொடர்பாக 1ம் பிரதிவாதியின் குடும்பத்தில்

ஏற்பட்ட 18.05.1992 ம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தை பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

Viii) பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள பி.சா.ஆ.3 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், தாவா சொத்தானது 1ம் பிரதிவாதிக்கு செங்கம்மாள் 720 சதுரடி இடத்தை 27.03.1992 ம் தேதியன்று உயில் ஆவணம் மூலம் எழுதிக்கொடுத்துள்ளார் என்பதும், மேலும், 10.04.1999 ம் தேதியன்று பவுனம்மாள் என்பவருக்கு தாவா சொத்தில் 290 சதுரடி இடத்தை உயில் ஆவணம் மூலம் வா.சா.ஆ.4 ஆவணம் மூலம் எழுதிக்கொடுத்துள்ளார் என்பதும் தெரிய வருகிறது. மேற்படி உயில் ஆவணத்தை எழுதிக்கொடுத்த பவுனம்மாள் இறந்துவிட்டார் என்பது பி.சா.ஆ.7 ஆவணம் மூலம் தெரிய வருகிறது.

ix) மேற்படி வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 ஆவணங்களான உயில் ஆவணங்களை நிரூபிக்கும் விதமாக மேற்படி ஆவணங்களில் சாட்சி கையொப்பமிட்ட ராஜேந்திரன் பி.சா.2 ஆகவும், மேற்படி ஆவணத்தை எழுதியவர் இறந்துவிட்டதால் அவரது மகன் ரகுபதி அவரது கையெழுத்தை நிரூபிக்கும் விதமாக பி.சா.3 ஆகவும் இந்நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளார். மேற்கண்ட பி.சா.2 மற்றும் பி.சா.3 சாட்சியத்தின் அடிப்படையில் தாவா சொத்தில் 1010 சதுரடியில் மேற்கண்ட பி.சா.ஆ.3 மற்றும் பி.சா.ஆ.4 ஆவணங்கள் மூலம் எழுதிக்கொடுத்துள்ளார் என்பது தெரிய வருகிறது. பி.சா.ஆ.4 உயில் ஆவணம் மூலம் கிடைத்த சொத்தினை புவனம்மாள் அவரது மகன் ரேவதிக்கு இனாம் செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் எழுதிக்கொடுத்துள்ளார் என்பது பி.சா.ஆ.6 ஆவணம் மூலம் தெரிய வருகிறது. மேற்படி ஆவணங்களை தொடர்ந்து தாவா சொத்துக்களானது 1ம் பிரதிவாதியின் அனுபோகத்தில் இருந்து வருகிறது என்பது தொடர்பாக எந்தவித ஆவணத்தையும் முன்னிறுத்தவில்லை.

x) வாதி தரப்பில் தாவா சொத்தானது வாதியின் அனுபோகத்தில் உள்ளது என்பது தொடர்பாக தனது தரப்பு சாட்சி மற்றும் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 ஆவணங்களை குறியீடு செய்து சாட்சியம் அளித்துள்ளார். மாறாக பிரதிவாதிகள் தரப்பில் தாவா சொத்தில் ஒருசில பகுதிகளை உயில் ஆவணம் மூலம் 1ம் பிரதிவாதிக்கும் புவனம்மாளுக்கும் எழுதிக் கொடுக்கப்பட்டது என்று பி.சா.ஆ.3, பி.சா.ஆ.4 ஆவணங்களை குறியீடு செய்தாலும், மேற்கண்ட ஆவணங்கள் பதிவு செய்யப்படாத ஆவணங்கள் என்பது தெரிய வருகிறது. உயில் ஆவணத்தை பொறுத்தவரை பதிவு செய்வது கட்டாயம் இல்லை என்ற போதிலும், மேற்கண்ட ஆவணத்தை தொடர்ந்து அந்த ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள சொத்தானது அந்த உயில் ஆவணத்தின் அடிப்படையில் கிடைக்கப்பெற்று அனுபோகம் செய்து வரப்படுகிறது என்பது தொடர்பாக எந்தவித இதர ஆவணங்களை பிரதிவாதிகள் தரப்பில் முன்னிறுத்தவில்லை. மேலும், மேற்கண்ட உயில் ஆவணங்களின் அடிப்படையில் தாவா சொத்து குறித்து விளம்புகை பரிகாரம் கோராததால் மேற்கண்ட உயில் ஆவணம் செல்லும் தன்மை குறித்து விவாதிப்பதே தேவையற்ற ஒன்று என இந்நீதிமன்றம் கருதுகிறது. இந்த வழக்கானது வாதியானவர் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் தாவா சொத்தில் வாதியானவர் உடமையிலும், அனுபோகத்திலும் இருந்து வருகிறார் என்பதை குறித்து வாதி தரப்பில் உரிய சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபித்துள்ளார் என இந்நீதிமன்றம் முடிவு காண்கின்றது. மேற்கண்ட வாதியின் அனுபோகத்தில் உள்ள தாவா சொத்தில் பிரதிவாதிகள் உயில் ஆவணங்களை கொண்டு இடையூறு செய்து வருகிறார்கள் என்பதை வாதியானவர் நிரூபித்துள்ளார் என இந்நீதிமன்றம் முடிவு காண்கின்றது.

xi) மேலும், தாவா சொத்து தொடர்பாக வாதியின் கணவர் 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.702/1993 தாக்கல் செய்து தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதால் இந்த வழக்கானது முன்தீர்ப்பு தடை கோட்பாட்டால் பாதிக்கப்பட்டுள்ளது என்ற பிரதிவாதிகள் தரப்பு வாதத்தை பரிசீலனை செய்கையில், மேற்கண்ட அசல் வழக்கு எண்.702/1993 வழக்கின் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை குறியீடு செய்யவில்லை. மேலும், அந்த வழக்கில் தாவா சொத்தின் உரிமை மூலம் தொடர்பாக விளம்புகை பரிகாரமும், மேலும், அதே தரப்பினர்களும் இல்லை என்பதாலும், மேலும் இந்த வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இந்நீதிமன்ற அசல் வழக்கு எண்.702/1993 வழக்கின் தீர்ப்பானது இந்த வழக்கில் முன் தீர்ப்பு தடையாக கருதப்படாது என இந்நீதிமன்றம் முடிவு காண்கின்றது.

Xii) ஆகவே, இந்த வழக்கானது முன் தீர்ப்பு தடை கோட்பாட்டால் பாதிக்கவில்லை என்றும், வாதியானவர் தாவா சொத்தில் உடமையிலும், அனுபோகத்திலும் இருப்பதை பிரதிவாதிகள் இடையூறு செய்வதால் வாதி கோருகின்ற நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பிரதிவாதிகளுக்கு எதிராக கிடைக்கதக்கது என எழுவினா-1 முதல் எழுவினா-3 க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கின்றது.

**11) <u>எழுவினா-4 க்கான தீர்வு</u> :-**

வாதி கோருகின்ற பிரதிவாதிக்கு எதிரான நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கதக்கது என இந்நீதிமன்றம் தீர்வு காணப்பட்டுள்ளதால் இதர பரிகாரங்கள் ஏதும் இல்லை என்றும், செலவுத்தொகையை அவரவரே ஏற்றுக்கொள்ள வேண்டும் என எழுவினா-4 க்கு தீர்வு காணப்படுகிறது.

**12) முடிவில்,**

1. தாவா அனுமதிக்கப்பட்டு, கீழ்கண்டவாறு தீர்ப்பளிக்கப்படுகிறது.

2. வாதியின் சட்டப்படியான உரிமையிலும், அமைதியான அனுபவத்திலும் இருந்து வரும் தாவா சொத்தில் பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, முகவர்களோ, ஏஜெண்ட்களோ எவ்வித இடையூறும் ஏற்படுத்தக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது.

3. செலவுத்தொகை இல்லை.

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30-ம் நாள் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
Date: 2026.04.30 18:00:04 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி.

**<u>வாதி தரப்பு சாட்சிகள்</u>** :-

| | |
|---|---|
| வா.சா.1 | திரு.தவமணி (1ம் வாதி), த/பெ.மணி. |
| வா.சா.2 | திரு.கண்ணன், த/பெ.பிச்சை. |

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u>** :-

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 18.05.1992 | செங்கம்மாள் அவர்களால் மணிக்கு ஏற்படுத்தப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம் சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ.2 | 22.02.2001 | நில அளவை துறை உதவி இயக்குனர் அவர்களால் மணி அவர்கள் பெயரில் வழங்கப்பட்ட பட்டா. |
| வா.சா.ஆ.3 | 20.08.2003 | திருவாரூர் மாவட்ட நில அளவை துறையால் வழங்கப்பட்ட புல வரைபடம். |
| வா.சா.ஆ.4 | 11.08.2003 | வாதிக்கு வாதியின் கணவரால் ஏற்படுத்தி கொடுக்கப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம். |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.5 | 31.08.2021 | நகர நிலவரி திட்ட தனி வட்டாட்சியர் மன்னார்குடி அவர்களால் வழங்கப்பட்ட பட்டா மாறுதல் உத்தரவு அசல். |
| வா.சா.ஆ.6 | -- | நகர சார்ஆய்வாளர் அவர்களால் வழங்கப்பட்ட நகரளவை பதிவேடு உண்மை நகல். |
| வா.சா.ஆ.7 | -- | நகர சார்ஆய்வாளர் அவர்களால் வழங்கப்பட்ட புலபடம். |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் :-**

| | |
|---|---|
| பி.சா.1 | திரு.சேட்டு (1ம் பிரதிவாதி), த/பெ. பிச்சை. |
| பி.சா.2 | திரு.ராஜேந்திரன் (3ம் தரப்பினர்), த/பெ. சுப்ரமணியன். |
| பி.சா.3 | திரு.ரகுபதி (3ம் தரப்பினர்), த/பெ. கோவிந்தராஜ். |

**பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :-**

| | | |
|---|---|---|
| பி.சா.ஆ.1 | 18.05.1992 | 1ம் பிரதிவாதியின் குடும்பத்திற்குள் ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரம் அசல். |
| பி.சா.ஆ.2 | 18.05.1992 | 1ம் பிரதிவாதியின் தாயார் செங்கம்மாள் அவரது 3 வது மகன் மணிக்கு எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரம் அசல். |
| பி.சா.ஆ.3 | 27.03.1992 | 1ம் பிரதிவாதியின் தாயார் செங்கம்மாள் அவரது 5 வது மகனான 1ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த உயில் ஆவணம் அசல். |
| பி.சா.ஆ.4 | 10.04.1999 | 1ம் பிரதிவாதியின் தாயார் செங்கம்மாள் அவரது 2 வது மகள் பவுனம்மாளுக்கு எழுதி கொடுத்த உயில் ஆவணம் அசல். |
| பி.சா.ஆ.5 | 28.04.1997 | உதவி செயற்பொறியாளர் அளித்த வரைபடம் அசல். |
| பி.சா.ஆ.6 | 14.03.2006 | பவுனம்மாள் அவரது மகளும், 1ம் பிரதிவாதியின் மனைவியுமான ரேவதிக்கு எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரம் அசல். |

| | | |
|---|---|---|
| பி.சா.ஆ.7 | 06.08.1999 | 1ம் பிரதிவாதியின் தாயார் செங்கம்மாள் இறப்பு சான்று அசல். |

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
Date: 2026.04.30 18:00:41 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி.